**OS. No. : 241/2021**

**DATE : 22.07.2024**

**NAME : இப்நூல் கௌளம் த/பெ. அகமது மொய்தீன்**

**பி. வா சா. 1 குறுக்கு விசாரணை – வாதி தரப்பில்**

1) வாதி எனக்கு என்ன உறவு என்றால் என் உடன் பிறந்த அண்ணன் ஆவார். என்னுடன் உடன் பிறந்தவர்கள் மொத்தம் எத்தனை நபர்கள் என்றால் 1. மீரான் மொய்தீன், 2. வாதி, 3. பார்த்தீமா பர்வீன், 4. பிரதிவாதி ஆகியோர் ஆகும். வழக்கு சொத்து ஒரு கடை பகுதி என்றால் முன்பக்கம் கடை பின்பக்கம் வீடும் சேர்ந்தது போல் வரும். பின்பக்கமுள்ள வீடு என் கொள் பாட்டி பார்த்தீமா பீபி க்கு சொந்தமானது என்றால் சரிதான்.

2) மேற்படி என் கொள் பாட்டி அவரது மகன் அப்துல் காதாருக்கு செட்டில்மெண்ட ஆவணம் ஏழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட 1953 ஆம் ஆண்டு ஆவணம் என்றால் சரிதான். என் தாத்தா அப்துல் காதர் 2006 ம் ஆண்டு அகமது மொய்தீன். மற்றும் அமீது பாஷா ஆகியோருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான்.

3) என் தந்தை அகமது மொய்தீன் எந்த வருடம் இறந்தார் என்றால் 2020 ம் வருடம் இறந்தார். என் தந்தை இறப்பதற்கு முன்பாக வீட்டின் முன்பகுதியை எனக்கு செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். என் குடும்ப சொத்தின் சர்வே எண்

3049/1 பி, 3049/2 என்றால் சரிதான். கடைக்கு பின்பகுதி உள்ள வீடு கிழக்கு மேற்கு 22 அடி வடக்கு தெற்கு 60 அடி என்றால் சரிதான்.

4) வாதி வழக்கு சொத்தின் சர்வே எண்ணாக 3093/2 என்ற சர்வே என்னை மட்டுமே குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். என் தந்தை எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் கொடுத்த சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 3049/2 ஆகும். எனக்கு எழுதப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் சர்வே எண் 3093/2 குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். கடை கிழக்கு மேற்கு 18 அடி வடக்கு தெற்கு 8 அடி அளவுகள் இருக்கும் என்றால் இரண்டு கடை உள்ளது. ஒரு கடை கிழக்கு மேற்கு 18 அடி வடக்கு தெற்கு 15 அடி இரண்டாவது கடை கிழக்கு மேற்கு 8 அடி வடக்கு தெற்கு 8 அடி இருக்கும்.

5) வடக்கு தெற்கு 8 அடி மட்டும் தான் கடை உள்ளது என்றாலும், நான் கூறுவது போல் 15 அடி இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 3049/2 என்ற சொத்தில் ஒரு பகுதி மட்டும் செட்டில்மெண்ட் ஆவணம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மீதியுள்ள பகுதி என் தந்தை பெயரிலேயே இருக்கிறது என்றால் சரிதான். சர்வே எண் 3049/2 ல் தான் நானும், ஏன் தாயார் மற்ற சகோதரர்கள் அனைவரும் குடியிருந்து வருகிறோம் எனற்றால் சரிதான். ஆனால் வாதி எங்களுடன் வசிக்கவில்லை.

6) வாதி எந்த வருடத்திலிருந்து எங்களுடன் வசிக்கவில்லை என்று நான் கூறுகிறேன் என்றால் 2015 ம் வருடத்திலிருந்து வாதி எங்களுடன் வசிக்கவில்லை. 2022 ம் வருடம் வரை வாதி எங்கசளுடன் வசித்து வந்தார் என்றாலும் முன் பக்க முள்ள கடையை வாதி தான்

அனுபவித்து வந்தார் என்றாலும், வாதியை வலுகட்டாயமாக அப்புறப்படுத்திவிட்டோம் என்றாலும், சுரியல்ல. வாதி 2015 ம் வருடம் என் தந்தை இருக்கும் போதிலிருந்தே அவர் எங்களுடன் வசிக்கவில்லை.

7) வாதி என் மீது 09.08.2021 ம் தேதியன்று முன் பக்க கடையை உடைத்து அதிலுள்ள உள்ள பொருட்களை அப்புறப்படுத்திவிட்டதாக என் மீது புகார் கொடுத்த இருந்தார் என்றால் சரிதான். ஆனால் அது பொய் புகார் ஆகும். மேற்படி புகாரை பொருத்து காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். வாதி என் மீது 23.02.2022 ம் வருடம் மீண்டும் என் மீது புகார் கொடுத்து இருந்தார் என்றால் சரிதான். அது பொய் புகார் ஆகும்.

8) காவல் துறையினர் மேற்படி புகாரின் போது அன்றைய தினமே இரண்டு பேரையும் அழைத்து விசாரித்தார்கள் எனற்ால் சரிதான். வீட்டின் முகவரி 46 /60 பி மற்றும் 60/ 46 பி இரண்டு முகவரியும் ஒரே முகவரி என்றால் சரிதான். மேற்படி இரண்டு புகார்களை கொடுக்கும் போது வீட்டின் முகவரி 46 /60 பி மற்றும் 60/ 46 பி இருந்து தான் புகார் கொடுத்து இருந்தார் என்றால் அவ்வாறு தான் கொடுத்து இருந்தார். ஆனால் அவர் வேறு இடத்தில் தான் குடியிருந்து வருகிறார்.

9) வாதி 2022 ம் வருடம் வரை மேற்படி கடையில் இரு சக்கர வாகனங்களின் இருக்கை கவர்களை விற்பனை செய்யுபம் கடை வைத்திருந்தார் என்றாலும் நான் தான் வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. நான் என்ன படித்தள்ளேன் எனற்ால் 10 ம் வகுப்பு முடித்து விட்டு 2008 ம் வருடம் டிப்ளோமா முடித்து விட்டேன். தற்போது எனக்கு என்ன

வயது என்றால் 35 வயது ஆகம். 2008 ம் வருடம் எனக்கு 18 வயது இருக்கும் என்றால் சரிதான்.

10) டிப்ளோமா முடித்தவுடன் நான் வேலைக்கு சென்று விட்டேனா என்றால் ஆமாம். இன்றைய தேதியில் கடை எந்த நிலையில் உள்ளது என்றால் தளம் போட்டு உள்ளது. கடை கட்டப்பட்டதற்காக செலவு குறித்து ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தந்தையார் எனக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் என் உடன் பிறந்த சகோதரர் யாரேனும் கையொப்பம் செய்து உள்ளார் என்றால் என் மூத்த அண்ணன் மீரான் மொய்தீன கையொப்பம் செய்து உள்ளார்.

11) வாதி குடும்ப சொத்தான சர்வே எண் 3049/1பி, 3049/2 சம்பந்தமாக பாக பிரிவினை கோரி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரிதான். செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி வைத்தது வாதி மற்றும் மற்ற வாரிசுகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. வாதி மற்றும் மற்ற வாரிசுகளுக்கும் தெரியும். எனக்கு எழுதி வதைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் மீரான் மொய்தீன் தவிர வேற யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

12) நான் என் தந்தையாரிடம் குடும்ப சொத்தின் ஒரு பகுதியும் பெற்று கொண்டு முன் பக்க கடையையும் வாதியை அப்புறப்படுத்தி ஆக்கிரமிப்பு செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. முன் பகுதி கடை சர்வே எண் வேறு என்றாலும், அது எனக்கு உரிமையானது இல்லை என்றாலும் சரியல்ல. என் தந்தை உயிருடன் இருக்கும் போது முன் பக்க கடையை வாதிக்கு கொடுத்து விட்டார் என்றாலும் அதில் வாதி தான் கடையை கட்டினார் என்றால் சரியல்ல.

13) வாதி முன் பக்க் கடையை கட்டியதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளார் என்றால் என் தந்தை தான் கட்டினார். நான் முன் பக்க கடையை எந்த வித பாத்தியமும் வராமல் அந்த பகுதியை ஆக்கிரமிப்பு செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு குடும்ப சொத்தில் கடையின் பின் பக்க பகுதி கொடுத்து உள்ளார்கள் என்றாலும் நான் கடையையும் சேர்த்து பொய்யாக உரிமைய கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

**Typewritten by the typist in open court to my dictation and to my bearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct**

**Sd/-P.T.Satheesh Kumar**
**Principal District Court,**
**Kancheepuram**